6th March 1969]

நகரசபைத் தலைவர், காஞ்சிபுரம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதில் அளிக்க விரும்புகிறேன்—

(அ) 1968, மே மாதத்தில் காஞ்சிபுரம் நகரசபைத் தலைவர் மீது 21 நகரமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் அறிவிப்பைக் கையெழுத்திட்டு வட்டார வருவாய்த்துறை அதிகாரியிடம் கொடுத்தனரா ?

(இ) ஆமெனில், இதன்மீது வருவாய்த்துறை அதிகாரி நடவடிக்கை எடுக்காத காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) ஆம்.

(இ) நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆலோசிக்க நகரமன்றத்தில் வட்டார வருவாய்த்துறை அதிகாரி கூட்டிய கூட்டத்திற்கு உறுப்பினர் யாருமே வரவில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member]

4-20 p.m.

II.—RULING ON A MEMBER'S REFERENCE TO D.M.K. MEMBERS OF PARLIAMENT

MR. CHAIRMAN : I have gone through the particular proceedings carefully. There is no sort of insinuation against Members of Parliament of the D.M.K. party. It seems it is a case of exhortation as it is done in the case of sports even while the contestants are active. Even before any objection was taken to his remarks, the hon. Member (Dr. M. A. Muthiah Chettiar) had said :

'I have repeated several times on the floor of this House that the 25 Members of the D.M.K. Party in Delhi are not doing their best. Probably they have done their best, we do not know. Newspapers have not given sufficient space for it. If that be so, I apologise in advance for having made these remarks. I am only exhorting them, the Members of Parliament, who represent South India in such large numbers and who have been elected with huge majorities to do their best for the country. I am requesting the Hon. Ministers to do this and that for the country and in the same way I am requesting them.' So let not heat be infused in the discussion. Already the weather here is very hot to-day.

III. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1969–70—*cont*

*** திரு. ஏ. பி. ஜனார்த்தனம் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1969–70 ஆம் ஆண்டுக்குரிய நிதியமைச்சர் அவர்களுடைய வரவு செலவுத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். அதிலே இருக்கிற சிறப்புக்களைக் குறித்து, புகுமுக வகுப்பு வரையிலே இலவசமாகக் கல்வி அளிக்கப்படுவது குறித்து, சேலம் உருக்காலைக்கு முதல்